රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.

இணைந்த சேவைகள் பிரிவு
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

COMBINED SERVICES DIVISION
*Independence Square, Colombo 07, Sri Lanka*

දුරකථනය / தொலைபேசி: **(94) 011- 2694560** / Telephone
ෆැක්ස් / தொலைநகல்: **(94) 011- 2692254** / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** / E-mail
වෙබ් අඩවිය / இணைத்தளம்: **www.pubad.gov.lk** / Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: R/6/2(II)/OPN/2020
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2024.06.20

**<u>இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021</u>**

*பரீட்சை ஆணையாளார் நாயகத்தினால் 2024.02.25 ஆந் திகதி நடத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்காக தகைமைபெற்ற 118 விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் இத்தால் வெளியிடப்பட்டிருப்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களின்பால் விசேட கவனம் செலுத்தவும்.*

1. *ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் மற்றும் பரீட்சையின் முழுப் புள்ளிகளின் 50% அல்லது அதற்கு மேற்பட்ட பெற்ற நூற்றுப் பதினெட்டு (118) விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் திறமை ஒழுங்கு அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.*

2. *நேர்முகப் பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II க்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.*

3. *அதன்படி இப் பெறுபேற்று ஆவணத்தில் பெயர் வெளியிடப்பட்டிருத்தல் மாத்திரம் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இன் நியமனம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான தகைமையாக அமைய மாட்டாதென்பதை கவனத்தில் கொள்ளவும்.*

4. *இவ் அலுவலர்க்கான நேர்முகப் பரீட்சை 2024.07.06 ஆந் திகதி நடத்தப்படுவதுடன் அதற்கான நேர் அட்டவணை கீழே வெளியிடப்பட்டிருப்பதுடன் குறித்த திகதியில் குறித்த நேரத்துக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் படி அறியத்தரப்படுகின்றது*

5. *நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதம் ஒவ்வெறு விண்ணப்பதாரிக்கும் தபாலில் அனுப்பிவைக்கப்படும். நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளும் போது பின்வரும் எழுத்தாவணங்களை உடன் கொண்டு வர வேண்டும்.*

   I. *அடிப்படை தகைமைகள் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் – (பிறப்புச் சான்றிதழ், பட்டப்படிப்பு, பட்டபின்படிப்பு / பட்டப் பின் டிப்ளோமா சான்றிதழ்*

   II. *தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் இலங்கையின் சாரதி அனுமதிப்பத்திரம்*

   III. *தாங்கள் பாவிக்கும் பெயருக்கும், பிறப்புச் சான்றிதழில் மற்றும் ஏனைய சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருக்குமிடையில் ஏதெனும் வேறுபாடுகள் இருப்பின் அந்த வேறுபாட்டை தெளிவுபடுத்துவதற்கான சத்தியப் பிரகடனம். (குறித்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களை வெவ்வேராகக் குறிப்பிட்டு அவை அனைத்தும் ஒருவரையே குறிக்கும் என் குறிப்பிட்டு ரூ. 50/- முத்திரையின் மேல் ஒப்பமிட்டு சமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்)*

IV. *நீங்கள் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலரிடம் பெற்றுக்கொண்ட வதிவிடச் சான்றிதல் (டி.எஸ்.4 படிவத்தின் மூலம் இருத்தல் வேண்டும்.)*

V. *உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை அழைப்புக்கடிதம்*

6. *https://forms.gle/qyRuY2hXmKAqai8L7 எனும் இணைப்புக்குள் சென்று குறித்த படிவத்தை* ***2024.06.28 ஆந் திகதிக்கு முன்னர்*** *பூரணப்படுத்த விண்ணப்பதாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்*

7. *அரச சேவை ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் தொடர்பாக கொண்டுவந்துள்ள கொள்கை ரீதியான தீர்மானத்தின்படி இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றது என்பதனை கவனத்தில் கொள்ளவும்.*

*ஒப்பம் / எஸ். ஆலோக்கபண்டார*
*இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.*